# மாநகர் போக்குவரத்துக் கழகம்

(சென்னை) வரையறுக்கப்பட்டது

# Metropolitan Transport Corporation

(Chennai) Limited

44 வது ஆண்டறிக்கை

2015 - 2016

44th Annual Report

# மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) வரையறுக்கப்பட்டது.

*(தமிழ்நாடு அரசு நிறுவனம்)*

பல்லவன் இல்லம்,

அண்ணாசாலை, சென்னை - 600 002.

## 44வது ஆண்டறிக்கை 2015 - 2016

## 44th Annual Report 2015 - 2016

# METROPOLITAN TRANSPORT CORPORATION

## (CHENNAI) LIMITED.

(A Government of Tamilnadu Undertaking)

Pallavan House,

Anna Salai, Chennai - 600 002.

மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) வரையறுக்கப்பட்டது.
**METROPOLITAN TRANSPORT CORPORATION (CHENNAI) LIMITED.**

## பொருளடக்கம் / CONTENTS


| பொருளடக்கம் | | CONTENTS | |
|---|---|---|---|
| இயக்குநர்கள் குழு | 1 | Board of Directors | 1 |
| வங்கிகள் | 2 | Bankers | 2 |
| கிளைகள் / பிரிவுகள் | 3 | Branches / Units | 3 |
| தலைவர் உரை | 4 | Chairman's Speech | 5 |
| இயக்குநர்களின் அறிக்கை | 8 | Report of the Directors | 9 |
| ஆண்டு கணக்கு விவர அறிக்கையின் பகுதி நகல் MGT 9 | 30 | Extract of Annual Return - MGT 9 | 31 |
| செயல்திறன் குறித்த முக்கிய விவரங்கள் | 52 | Select Indicators on the performance | 52 |
| இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் அவர்களின் கருத்துரை | 60 | Comments of the comptrollers & Auditor - General of India | 61 |
| தணிக்கையாளர்களின் அறிக்கை | 62 | Auditors' Report | 63 |
| ஐந்தொகைக் குறிப்பு | 98 | Balance Sheet | 98 |
| ஆதாய - இழப்புக் கணக்கு | 100 | Statement of Profit and Loss | 100 |
| நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் | 102 | Notes to Financial Statements | 103 |
| பணப்புழக்க நிலை அறிக்கை | 158 | Cash Flow Statement | 159 |

## இயக்குநர்கள் குழு

**தலைவர்**
திரு. சந்தரகாந்த் பி. காம்ப்ளே, இ.ஆ.ப.,

**மேலாண்மை இயக்குநர்**
திரு. வி. கிருஷ்ணமூர்த்தி, பி.ஈ.

**இயக்குநர்கள்**
திரு. என். வெங்கடேஷ், இ.ஆ.ப.
திரு. வி. மோகன்ராஜ், இ.ஆ.ப.,
திரு. டி. கார்த்திகேயன், இ.ஆ.ப.,
திருமதி. டி. சபிதா, இ.ஆ.ப.,
திரு. சி. விஜயகுமார், இ.ஆ.ப.,
திரு. எஸ். ஜார்ஜ், இ.கா.ப.,
திரு. எஸ். சம்பத், எம்.ஈ.,
திரு. கே. முத்துக்கருப்பன், பி.ஈ.
திரு. எச்.சுந்தர், எம்.காம்.,பி.ஜி.எல்., எப்.சி.எம்.ஏ.,பி.ஜி.டி.சி.ஏ.
திரு. ஆர். அனந்த பத்மநாபன், பி.ஈ.
திரு. ஜி. உதயகுமார், பி.ஈ. எம்.சி.ஏ.

**தற்சார்பு இயக்குநர்**
திரு. எஸ். ரகுநாதன், எப்.சி.ஏ.

**மகளிர் மற்றும் தற்சார்பு இயக்குநர்**
திருமதி. ஆர். ஓவியா, எம்.காம், எப்.சி.எஸ்.

**நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர்**
திரு.வி.வெங்கடராஜன்,
எம்.காம்.,ஏ.சி.எம்.ஏ.,பி.ஜி.டி.எப்.எம்.

**நிறுவனச் செயலர்**
திரு. எம். சந்திரசேகர், பி.காம். ஏ.சி.எஸ்.

**சட்டப்படிக்கான தணிக்கையாளர்கள்**
திருவாளர்கள் ஆர். ஜானகிராமன் அன்டு கோ.

**உள் தணிக்கையாளர்கள்**
திருவாளர்கள் ஏ. ஜான் மோரீஸ் அன்டு கோ.
திருவாளர்கள் சி. சீனிவாசன் அன்டு கோ.
திருவாளர்கள் சுந்தரம் அன்டு சீனிவாசன்
திருவாளர் ஆர். சீனிவாசன் அன்டு அசோசியேட்ஸ்
திருவாளர்கள் வி. யுவராஜ் அசோசியேட்ஸ்
திருவாளர்கள் ராஜா அசோசியேட்ஸ்

## BOARD OF DIRECTORS

**CHAIRMAN**
Thiru CHANDRAKANT B. KAMBLE, I.A.S.,

**MANAGING DIRECTOR**
Thiru V. KRISHNAMOORTHY, B.E.,

**DIRECTORS**
Thiru N. VENKATESH, I.A.S.,
Thiru V. MOHANRAJ, I.A.S.,
Thiru D. KARTHIKEYAN, I.A.S.,
Tmt. D. SABITHA, I.A.S.,
Thiru C. VIJAYA KUMAR, I.A.S.,
Thiru S.GEORGE, I.P.S.,
Thiru S.SAMPATH, M.E.,
Thiru K. MUTHU KARUPPAN, B.E.,
Thiru H. SUNDER, M.Com., B.G.L., F.C.M.A. PGDCA
Thiru R. ANANDAPADMANABAN, B.E.,
Thiru G. UDAYA KUMAR, B.E., M.C.A.,

**INDEPENDENT DIRECTOR**
Thiru S.RAGHUNATHAN, FCA.,

**WOMAN CUM INDEPENDENT DIRECTOR**
Tmt. R.OVIA.M.Com,FCS,

**FINANCIAL ADVISER & CHIEF ACCOUNTS OFFICER**
Thiru V. VENKATARAJAN, M.Com., AC.M.A.,PGDFM

**COMPANY SECRETARY**
Thiru M.CHANDRASEKHAR, B.Com., A.C.S.,

**STATUTORY AUDITORS**
M/s. R. JANAKIRAMAN & Co.

**INTERNAL AUDITORS**
M/s. A. JOHN MORIS & Co.,
M/s. C. SRINIVASAN & Co.
M/s. SUNDARAM & SRINIVASAN,
M/s. R. SRINIVASAN & ASSOCIATES
M/s. V.YUVARAJ ASSOCIATES,
M/s. RAJA ASSOCIATES,

**வங்கிகள் :**

**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி,**
கதீட்ரல் கிளை,
762, அண்ணாசாலை,
சென்னை - 600 002.

**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி,**
பல்லவன் சாலை கிளை,
சென்னை - 600 002.

**யூகோ வங்கி,**
அடையாறு கிளை,
85/1, முதல் பிரதான சாலை,
காந்தி நகர், சென்னை - 600 020.

**யூகோ வங்கி,**
மிட் கார்பரேட் கிளை,
3வது மாடி, 328, தம்புசெட்டி தெரு,
சென்னை - 600 001.

**கனரா வங்கி,**
திருவான்மியூர் கிளை,
159, திருவள்ளுவர் சாலை,
திருவான்மியூர், சென்னை - 600 041.

**கனரா வங்கி,**
அயனாவரம் கிளை,
123, குன்னூர் நெடுஞ்சாலை,
சென்னை - 600 023.

**விஜயா வங்கி,**
மவுண்ட் ரோடு கிளை,
168, அண்ணாசாலை,
சென்னை - 600 002.

**இந்தியன் வங்கி,**
துறைமுகம் கிளை,
66, ராஜாஜி சாலை, சென்னை - 600 001.

**ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா**
பார்க் டவுன் கிளை,
68, மாலை சந்தை சாலை,
சென்னை - 600 03.

**பதிவு அலுவலகம் :**
பல்லவன் இல்லம்,
அண்ணாசாலை, சென்னை - 600 002
தொலைபேசி : 23455801 (9 இணைப்புகள்)
தந்தி : "எம்டீசிபஸ்"
மின் அஞ்சல் : edp@mtcbus.org
mtc_edp@dataone.in
நிகரி : (091) (044) 23455830

**BANKERS:**

**Indian Overseas Bank,**
Cathedral Branch,
762, Anna Salai,
Chennai – 600 002.

**Indian Overseas Bank,**
Pallavan Salai Branch,
Chennai – 600 002.

**UCO Bank,**
Adyar Branch,
85/1, 1st Main Road, Gandhi Nagar,
Chennai – 600 020.

**UCO Bank,**
Mid Corporate Branch,
III Floor,328,Thambu Chetty Street,
Chennai – 600 001.

**Canara Bank,**
Thiruvanmiyur Branch,
159,Thiruvalluvar Salai,
Thiruvanmiyur, Chennai – 600 041.

**Canara Bank,**
Aynavaram Branch,
123, Konnur High Road,
Chennai – 600 023.

**Vijaya Bank,**
Mount Road Branch,
168, Anna Salai, Chennai – 600 002.

**Indian Bank,**
Harbour Branch,
66, Rajaji Salai, Chennai - 600 001.

**State Bank of India,**
Park Town Branch,
68, Evening Bazaar Road,
Chennai - 600 003.

**REGISTERED OFFICE:**
Pallavan House,
Anna Salai, Chennai - 600 002.
Phone : 23455801 (9 lines)
Grams : "EMTECEBUS"
E-mail : edp@mtcbus.org
mtc_edp@dataone.in
Fax : (091) (044) 23455830

## METROPOLITAN TRANSPORT CORPORATION (CHENNAI) LIMITED.

| வ.எண். | கிளையின் பெயர் | வ.எண். | கிளையின் பெயர் |
|---|---|---|---|
| 1. | அடையாறு | 17. | எம்.கே.பி. நகர் |
| 2. | ஆலந்தூர் | 18. | பெரம்பூர் |
| 3. | அம்பத்தூர் | 19. | பூவிருந்தவல்லி |
| 4. | அண்ணாநகர் | 20. | பாடியநல்லூர் |
| 5. | ஆவடி | 21. | சைதாப்பேட்டை |
| 6. | அயனாவரம் | 22. | செம்மன்சேரி |
| 7. | அய்யப்பன்தாங்கல் | 23. | தியாகராயநகர் |
| 8. | பேசின் பாலம் | 24. | தாம்பரம் |
| 9. | மத்திய பணிமனை | 25. | திருவான்மியூர் |
| 10. | குரோம்பேட்டை - 1 | 26. | திருவொற்றியூர் |
| 11. | குரோம்பேட்டை - 2 | 27. | தண்டையார்பேட்டை - I |
| 12. | எண்ணூர் | 28. | தண்டையார்பேட்டை - II |
| 13. | கே.கே. நகர் | 29. | வடபழனி |
| 14. | குன்றத்தூர் | 30. | வியாசர்பாடி |
| 15. | மாதவரம் | 31. | ஆதம்பாக்கம் |
| 16. | மந்தைவெளி | 32. | பெசன்ட் நகர் |

**பிரிவுகள்**

1. மா.போ.க. குரோம்பேட்டைதொழிற்பட்டறை
2. பட்டுலாஸ் ரோடு தொழிற்கூடம்
3. தண்டையார்பேட்டை மண்டல தொழிற்கூடம்
4. மத்திய பணிமனை - கூண்டு முக்கிய பழுது பார்ப்பு கூடம்

**முழு தகுதிசான்று பிரிவுகள்**

1. அடையாறு மண்டலம் - அடையாறு பணிமனை
2. குரோம்பேட்டை மண்டலம் - குரோம்பேட்டை பணிமனை
3. சைதாப்பேட்டை மண்டலம் - கே.கே. நகர் பணிமனை
4. வடபழனி மண்டலம் - வடபழனி பணிமனை
5. மத்திய மண்டலம் - அயனாவரம் பணிமனை
6. அண்ணாநகர் மண்டலம் - அம்பத்தூர் பணிமனை
7. தண்டையார்பேட்டை மண்டலம் - தண்டையார்பேட்டை -1 பணிமனை
8. மாதவரம் மண்டலம் - மாதவரம் பணிமனை

| S.No | Branch Name | S.No | Branch Name |
|---|---|---|---|
| 1. | Adyar | 17. | M.K.B. Nagar |
| 2. | Alandur | 18. | Perambur |
| 3. | Ambattur | 19. | Poonamallee |
| 4. | Anna Nagar | 20. | Padiyanallur |
| 5. | Avadi | 21. | Saidpet |
| 6. | Ayanavaram | 22. | Semmanchery |
| 7. | Ayyappanthangal | 23. | T. Nagar |
| 8. | Basin Bridge | 24. | Tambaram |
| 9. | Central | 25. | Thiruvanmiyur |
| 10. | Chrompet -1 | 26. | Thiruvottriyur |
| 11. | Chrompet -2 | 27. | Tondiarpet - I |
| 12. | Ennore | 28. | Tondiarpet - II |
| 13. | K.K. Nagar | 29. | Vadapalani |
| 14. | Kundrathur | 30. | Vyasarpadi |
| 15. | Madhavaram | 31. | Adambakkam |
| 16. | Mandaveli | 32. | Besant Nagar |

**WORSHOP**

1. M.T.C.W. - Chromepet
2. Patullos Road Workshop
3. Regional Work Shop - Tondiarpet
4. CD- Major Body Repair Unit

**FULL FC UNITS**

1. Adyar Region - Adyar Depot
2. Chrompet Region - Chrompet Depot
3. Saidpet Region - K.K. Nagar Depot
4. Vadapalani Region - Vadapalani Depot
5. Central Region - Ayanavaram Depot
6. Anna Nagar Region - Ambathur Depot
7. Tondiarpet Region - Tondiarpet - 1 Depot
8. Madhavaram Region- Madhavaram Depot.

# தலைவர் உரை

அன்பார்ந்த உறுப்பினர்களே,

இக்கழகத்தின் 44வது ஆண்டு, பொதுக்குழுக் கூட்டத்திற்கு தங்களை வரவேற்பதில் பெருமிதம் கொள்கிறேன். 2015-16ஆம் ஆண்டிற்கான இயக்குனர்கள் அறிக்கையும் தணிக்கை செய்யப்பட்ட கணக்கறிக்கைகளும் உங்களிடம் அளிக்கப்பட்டுள்ளது. உங்களது ஒப்புதலுடன் அவை படிக்கப்பட்டதாகக் கருதுகிறேன்.

இக்கழகத்தின் நடப்பாண்டின் சிறப்புக் கூறுகளையும் செயலாக்கங்களையும் எதிர்காலத் திட்டங்களையும் பற்றி தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் சிறப்புரிமை எடுத்துக் கொள்கிறேன்.

31.03.2016 ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இக்கழகத்தின் ஆதாய இழப்பு விவரங்களின்படி இந்த ஆண்டில் ஏற்பட்ட ரொக்க இழப்பு ரூ.47127.94 இலட்சமாகும். 2014-15ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரொக்க இழப்பு ரூ.35292.61 இலட்சமாகும். தேய்மானத்திற்காக ரூ.2839.51 இலட்சமும், வட்டிக்காக ரூ.8722.75 இலட்சமும், ஒதுக்கிய பின்னர் இந்த ஆண்டுக்கான புத்தக இழப்பு ரூ.49967.45 இலட்சமாகும். 31.3.2015ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இழப்பு ரூ.39268.01 இலட்சமாகும்.

சென்ற ஆண்டோடு ஒப்பிடும்போது இவ்வாண்டின் இயக்க வருவாய் ரூ.1447.45 இலட்சம் (1.34%) குறைந்துள்ளது. நவம்பர் 2015 மற்றும் டிசம்பர் 2015 ல் எதிர்பாராமல் ஏற்பட்ட மழையே இதற்கு முக்கிய காரணமாகும். மாறுபடும் செலவுகள் ரூ.8901.97 இலட்சம் குறைந்துள்ளது. 2015-16ஆம் ஆண்டின் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட உயர்வேக எண்ணை விலை குறைவே இதற்கு காரணமாகும். நிலையான செலவுகள் ரூ.16993.65 இலட்சம் அதிகரித்துள்ளது. இதில் பணிக்கொடைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு அதிகரித்ததாலும், ஓய்வூதியப் பங்களிப்பிற்காக அரசின் கட்டளைப்படி முந்தைய ஆண்டுகளைப் போல 12% பங்களிப்பிற்கு பதிலாக முழு ஓய்வூதிய தொகையையும் கழகமே செலுத்தியதாலும் நிர்வாகச் செலவுகள் 21247.59 இலட்சம் அதிகரித்துள்ளது. ஏனைய நிலையான செலவுகள் முந்தைய ஆண்டை ஒப்பிடுகையில் ரூ.3792.35 இலட்சம் குறைந்துள்ளது. 2014-15ஆம் நிதியாண்டில் ரூ.4927.54 இலட்சம் உயர்வேக எண்ணை விலை அதிகரித்தமைக்காக அரசிடமிருந்து பெற வேண்டிய தொகையை திரும்பப் பெற்றது. இக்கழகம் மேற்கொண்ட பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் பேருந்து பழுதடையும் விகிதம் குறைந்துள்ளது.

2014-15ஆம் ஆண்டிலிருந்து எடுத்துவரப்பட்ட 464 சாதாரண பேருந்துகளில் (354 சாதாரண பேருந்துகள், 110 சிறிய பேருந்துகள்) 115 டாடா நிறுவன பேருந்துகளும், 110 சிறிய பேருந்துகளும் 2015-16 ஆம் ஆண்டில் தடத்தில் இயக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 239 சாதாரண பேருந்துகள் 2016-17 ஆம் ஆண்டிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

29.02.2016 ஆம் நாளிட்ட அரசு ஆணை எண். G.O.Ms. No.22, போக்குவரத்து (B1) துறையின்படியான அரசின் கோட்பாடுகளுக்கு இணங்க உங்களது நிறுவனம் மூத்த குடிமக்கள் மாதம் ஒன்றுக்கு 10 வில்லைகள் என்ற அடிப்படையில் மாநகரப் போக்குவரத்துக் கழக குளிரூட்டப்பட்ட பேருந்துகள் தவிர ஏனைய பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய அனுமதித்துள்ளது. இதன்மூலம் சென்னை நகர மூத்த குடி மக்களின் நலத்திற்காக அரசு மாதம் ஒன்றுக்கு உத்தேசமாக ரூ.2.00 கோடி செலவு செய்கிறது.

# CHAIRMAN'S SPEECH

Dear Members,

It gives me immense pleasure to welcome you all to the 44th Annual General Meeting of your Company. I am aware that the Report of the Directors and the Audited Statement of Accounts for the financial year 2015-2016 have already been made available to you and with your permission, I shall take the same as read.

It is my privilege to share with you some of the highlights of the performance of your Company for the year 2015-16 and also about the future plans of the Company.

The Corporation for the year ended 31.03.2016 had ended up with a Cash Loss of Rs.47127.94 lakhs as against the Cash Loss of Rs.35292.61 lakhs in 2014-15. The loss for this year was Rs.49967.45 lakhs, after charging Depreciation of Rs.2839.51 lakhs and interest of Rs.8722.75 lakhs as against the loss of Rs.39268.01 lakhs for the year ended 31.03.2015.

The operational revenue has decreased by Rs.1447.45 lakhs (1.34%) during the year when compared to the previous year which is mainly due to unprecedented rain during November 2015 and December 2015. The variable cost decreased by Rs.8901.97 lakhs due to decrease in Diesel price during the middle of 2015-16. The fixed cost has increased by Rs.16993.65 lakhs. Out of which, the establishment cost has increased by Rs.21247.59 lakhs due to increase in gratuity provision and accounting of Pension Contribution on actual basis as per Government direction instead of @ 12% as was done in earlier years. Other fixed cost has decreased by Rs.3792.35 lakhs when compared to previous year. The reason for the decrease in other fixed cost was writing off of HSD hike compensation receivable of Rs.4927.54 lakhs during 2014-15. The preventive measures taken by the Corporation has helped to reduce the breakdown.

Out of the 464 (354 ordinary and 110 small buses) ordinary buses carried over from 2014-15, 115 TATA vehicles and 110 Small Buses were put on road during 2015-16. The balance 239 ordinary buses were carried over to 2016-17.

In compliance with the policy of the Government vide G.O.Ms.No.22, Transport B1 Department, dated 29.02.2016 your Company has been providing 10 tokens per month to Senior Citizens at Chennai to travel free of cost in MTC buses except AC buses. Approximately, Government is spending around Rs. 2.00 Crores per month on this account for the welfare of Senior Citizens in Chennai.

2015-16ஆம் ஆண்டில் அரசு ரூ.5.07 கோடி மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டினைத் தீர்க்க ஏற்படுத்தப்பட்ட நிதிக்காகவும், ரூ.33.16 கோடி டீசல் விலை உயர்வை ஈடுகட்டவும் வழங்கியுள்ளது. அனுமதிக்கப்பட்ட மூலதனத்தை அரசு மேலும் ரூ.150 கோடி அதிகரித்துள்ளது. 2015-16 ஆம் ஆண்டில் அரசு ரூ.25.51 கோடி பங்கு மூலதனமாக வழங்கியுள்ளது. மேலும், இவ்வாண்டில் அரசு ரூ.89.80 கோடி மாணவர்கள் சலுகை பயணச்சீட்டுகள் வழங்கியதற்காக அளித்துள்ளது.

இத்தகைய அறைகூவலான சூழலின் பின்னணியிலும் இவ்வாண்டு உங்களது கழகம் தமிழ்நாடு போக்குவரத்து நிதி நிறுவனத்திடமிருந்து பெற்ற கடன்களுக்கான அசலையும், வட்டியையும் தடங்கலின்றி செலுத்தியுள்ளது.

நமது முன்னுள்ள வழி அறைகூவலும் சந்தர்ப்பமும் நிறைந்ததாகவுள்ளது. நாம் இந்த சந்தர்ப்பங்களை முழுவதுமாக பயன்படுத்திக் கொள்ள விழைகிறோம். உங்களது கழகம் இந்த ஆண்டு 200 சிறிய பேருந்துகளை சென்னையில் உள் பகுதியிலும் சுற்றிலும் உள்ள ஊர்களுக்கு இயக்குவதின் மூலம் வணிகத்தின் விரிவில் கால்பதித்துள்ளது.

தற்போது 32 பணிமனைகளைக் கொண்டுள்ள தங்கள் கழகம் மேலும் கண்ணகி நகரில் விரைவில் புதியதாக பணிமனையை துவக்கவுள்ளது என்பதை அறிவிப்பதில் பேருவகை கொள்கிறேன்.

இயக்குநர்கள் குழுவில் என்னுடன் பணியாற்றிய சக இயக்குநர்கள் நல்கிய ஒத்துழைப்புக்கும் வழி காட்டுதலுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கழகத்தின் நிர்வாக இயக்குனர் மற்றும் அதிகாரிகள், பணியாளர்கள், தொழிலாளர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உரிய நேரத்தில் ஆதரவும் நிதி உதவியும் அளித்த தமிழ்நாடு அரசு, இந்திய அரசு, திருவாளர்கள் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, கனரா வங்கி, யூகோ வங்கி, விஜயா வங்கி மற்றும் இந்திய மாநில வங்கி ஆகியவற்றிற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கழகத் தணிக்கையாளர்கள், சட்டப்படிக்கான தணிக்கையாளர்கள், கணக்குத் துறைத்தலைவர் (தணிக்கை - II) - ன் அலுவலக அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோர் அளித்த ஒத்துழைப்புக்கும் வழிகாட்டுதலுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பார்ந்த உறுப்பினர்களே, உங்கள் அனுமதியுடன் 2015-16 ஆம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்கறிக்கைகளை ஒப்புதலளித்து ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கொள்கிறேன்.

சந்திரகாந்த் பி. காம்ப்ளே,
தலைவர்.

இடம் : சென்னை - 600 002.
நாள் : 27.12.2016

During the year 2015-16 the Government have sanctioned Rs.5.07 crores towards MACT corpus fund and Rs.33.16 crores towards HSD price hike compensation. The Government have increased the authorised share capital by Rs.150 crores and extended Rs.25.51 Crores as Share Capital assistance during the year 2015-16; The Government have also released a sum of Rs.89.80 crores during the year 2015-16 towards reimbursement of students' concessional passes.

Against the backdrop of this challenging environment, your Corporation has repaid the Principal and interest to the Tamilnadu Transport Development Finance Corporation Limited without default during the year.

The road ahead is filled with challenges and opportunities. We are fully equipped to grab the opportunities. Your Company has been expanding its footprint through intensifying operations with promising business potential in the interior parts of Chennai and around Chennai by operating 200 small buses during the year.

Your Corporation has 32 Depots as on date and it gives me pleasure to announce that your company has almost completed construction of one more depot at Kannagi Nagar which will be opened shortly.

I would like to take this opportunity to express my gratitude to all the colleagues on the Board for their excellent co-operation and guidance. Special thanks to the Managing Director and his team of Officers, the staff and workmen of the Company. I wish to place on record my thanks to the Government of Tamilnadu, Government of India, M/s. Tamil Nadu Transport Development Finance Corporation Limited, Indian Overseas Bank, Indian Bank, Canara Bank, UCO Bank, Vijaya Bank and State Bank of India for their timely help and financial assistance. I thank the Internal Auditors, Statutory Auditors, Secretarial Auditor and officers/staff of the Accountant General (Audit-II), for their guidance and co-operation.

Dear members, with your kind permission, I now move that the audited Statement of Accounts for the year 2015-16 be approved and adopted.

Chandrakant B. Kamble,
Chairman

Place : Chennai - 600 002.
Date : 27.12.2016.

# இயக்குநர்களின் அறிக்கை

31.03.2016 ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளுடன் இக்கழகத்தின் 44 ஆம் ஆண்டறிக்கையை அளிப்பதில் உங்கள் இயக்குநர்கள் பெருமகிழ்ச்சி அடைகின்றனர்.

## I. நிதி நிலைமைகள் :

ஆய்வாண்டின் நிதி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

(ரூ.இலட்சத்தில்)

| விவரங்கள் | 2015 – 2016 | | 2014 – 2015 | |
|---|---|---|---|---|
| | தொகை | கிலோ மீட்டர் ஒன்றுக்கான காசுகள் | தொகை | கிலோ மீட்டர் ஒன்றுக்கான காசுகள் |
| **வருமானம் :** | | | | |
| 1. இயக்க வருவாய் | | | | |
| A.இயக்க வருமானம் | 108306.56 | 3064 | 109754.01 | 3123 |
| B. டீசல் விலை உயர்வு இழப்பீடு | 3316.00 | 94 | 7416.00 | 211 |
| C.சலுகை மற்றும் இலவச பயணச்சீட்டுகள் வழங்குதல் ஆகியவற்றில் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்த வகையில் அரசிடமிருந்து கிடைத்த வருவாய் | 16163.01 | 457 | 14196.96 | 404 |
| 2. இயக்கம் சாராத வருமானம் | 2691.24 | 76 | 1694.84 | 48 |
| 3. சொத்துக்கள் விற்ற வகையில் ஆதாயம் | 4.21 | 0 | 26.97 | 1 |
| **மொத்தம்** | **130481.02** | **3691** | **133088.78** | **3787** |
| **செலவு** | | | | |
| 1. எரிபொருள் | 39071.66 | 1105 | 47672.00 | 1356 |
| 2. உதிரிபாகங்கள், பழுதுபார்ப்புகள் மற்றும் மசகெண்ணெய் | 5719.76 | 162 | 5861.10 | 167 |
| 3. டயர்கள், டியூப்புகள், மற்றும் பிளாப்புகள் | 2841.65 | 80 | 3001.95 | 85 |
| 4. பணியாளரமைப்பு | 112977.44 | 3196 | 91729.87 | 2610 |
| 5. மோட்டார் வாகன வரி மற்றும் அனுமதிக் கட்டணங்கள் | 1055.42 | 30 | 1149.84 | 33 |
| 6. வட்டி மற்றும் நிதிக் கட்டணங்கள் | 8722.75 | 247 | 7954.03 | 226 |
| 7. ஏனைய செலவுகள் | 7220.28 | 204 | 11012.60 | 313 |
| 8. தேய்மானம் | 2839.51 | 80 | 3975.40 | 113 |
| **மொத்தம்** | **180448.47** | **5104** | **172356.79** | **4903** |
| இந்த ஆண்டுக்கான ஆதாயம் / இழப்பு | –49967.45 | –1413 | –39268.01 | –1116 |
| ஐந்தொகை விவரக் கணக்கிற்கு மாற்றப்பட்ட ஆதாயம் / இழப்பு | –49967.45 | –1413 | –39268.01 | –1116 |
| உருவாக்கப்பட்ட பணம் | –47127.94 | | –35292.61 | |
| வருவாய் ஈட்டும் வகையில் ஓடிய கி.மீ. (இலட்சத்தில்) | 3535.23 | | 3514.68 | |
| இயக்கப்பட்ட பேருந்து நாட்கள் | 1080943 | | 1163158 | |

நவம்பர் 2015, டிசம்பர் 2015 ல் பெய்த எதிர்பாராத மழையின் காரணமாக இந்த நிதியாண்டின் இயக்க வருவாய் ரூ.1447.45 இலட்சம் (1.34%) குறைந்துள்ளது.

# REPORT OF THE DIRECTORS

The Directors of the Company have great pleasure in presenting the 44th Annual Report of the Corporation containing the Audited Statement of Accounts along with the Report of the Auditors for the year ended 31st March 2016.

## 1. FINANCIAL RESULTS:

The Financial Performance of your Company during the year under review is shown below.

(Rs. in Lakhs)

| Particulars | 2015 - 2016 | | 2014 - 2015 | |
|---|---|---|---|---|
| | Amount | PPK | Amount | PPK |
| **INCOME :** | | | | |
| **1. Operational Income** | | | | |
| A. Operational Revenue | 108306.56 | 3064 | 109754.01 | 3123 |
| B. HSD Hike Compensation | 3316.00 | 94 | 7416.00 | 211 |
| C. Reimb. of Loss on Issue of Concessional/Free Passes | 16163.01 | 457 | 14196.96 | 404 |
| 2. Non-Operational Income | 2691.24 | 76 | 1694.84 | 48 |
| 3. Profit On Sale of Assets | 4.21 | 0 | 26.97 | 1 |
| **Total** | **130481.02** | **3691** | **133088.78** | **3787** |
| **EXPENDITURE :** | | | | |
| 1. Fuel | 39071.66 | 1105 | 47672.00 | 1356 |
| 2. Spares, Repairs & Lubricants | 5719.76 | 162 | 5861.10 | 167 |
| 3. Tyres, Tubes & Flaps | 2841.65 | 80 | 3001.95 | 85 |
| 4. Establishment | 112977.44 | 3196 | 91729.87 | 2610 |
| 5. M.V. Tax & Permit Fees | 1055.42 | 30 | 1149.84 | 33 |
| 6. Interest and Finance Charges | 8722.75 | 247 | 7954.03 | 226 |
| 7. Other Expenses | 7220.28 | 204 | 11012.60 | 313 |
| 8. Depreciation | 2839.51 | 80 | 3975.40 | 113 |
| **Total** | **180448.47** | **5104** | **172356.79** | **4903** |
| Profit/Loss for the Year | -49967.45 | -1413 | -39268.01 | -1116 |
| Profit/Loss transferred to Balance Sheet | -49967.45 | -1413 | -39268.01 | -1116 |
| Cash Generation | -47127.94 | | -35292.61 | |
| Effective Kilometres (in Lakhs) | 3535.23 | | 3514.68 | |
| Operated Bus Days | 1080943 | | 1163158 | |

The Operational Revenue during the year under review has decreased to the tune of Rs.1447.45 Lakhs (1.34%) when compared to the previous year mainly due to unprecedented rain during November 2015 and December 2015.

பணியாளரமைப்பு, செலவுகள் அதிகரித்ததன் காரணமாக இயக்கச் செலவு முந்தைய ஆண்டைக் காட்டிலும் அதிகரித்தது.

(a) பணியாளரமைப்புச் செலவு, ரூபாய் 21247.57 இலட்சமாக அதிகரித்தது. அகவிலைப்படி 18% (6%+ 6% +6%) உயர்ந்தது. மற்றும் ஓய்வூதிய ஒப்புக்கொண்ட பொறுப்பான 12% -ற்கு பதிலாக முழு தொகையை கணக்கீடு செய்த வகையில் ரூ.9889.88 இலட்சமும் அதிகரித்துள்ளது.

(b) சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திடமிருந்து பெற்ற குறித்த காலக்கடன் ரூ.768.72 இலட்சம் அதிகரித்துள்ளது. ஓய்வூதியம் அளிப்பதற்காக 12 விழுக்காட்டிற்கு பதிலாக முழுத்தொகையும் அளித்ததே கடன்கள் அதிகரித்ததற்கு முக்கிய காரணமாகும்.

(c) முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், ஏனைய செலவுகள், ரூபாய் 3792,32 இலட்சம் அளவுக்கு குறைந்துள்ளது. அரசு கடிதம் எண். 6742 / T1/2015 - 1, நாள் 04.06.15-ன்படி முந்தைய ஆண்டு தொடர்பான உயர்வேக டீசல், எண்ணெய் மானியமான ரூபாய் 4927.54 இலட்சம் திரும்பப் பெறப்பட்டதே இந்த உயர்வுக்குக் காரணமாகும். அவ்வாறான திரும்பப் பெறுதல் ஏதும் 2015 - 16-ல் இடம் பெறவில்லை.

## 2. இயக்க செயல் திறன்

சில முக்கிய இயக்க செயல்திறன் குறிப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன :

| வ.எண். | விவரங்கள் | 2015-16 | 2014-15 |
|---|---|---|---|
| 1. | பயணம் செய்தவர்களின் எண்ணிக்கை இலட்சத்தில் (சலுகை பயணச்சீட்டுகள் உட்பட) | 17814.63 | 18120.52 |
| 2. | மொத்த கொள்ளளவில் பயணம் செய்தவர்களின் விகிதாச்சாரம் | 76.22 | 76.12 |
| 3. | நாளொன்றுக்கு ஒரு பேருந்து ஓடிய சராசரி கி.மீ. | 298 | 302 |
| 4. | பேருந்துகள் பழுதடைந்து நின்றுவிட்ட எண்ணிக்கை | 110 | 43 |
| 5. | 10,000 கி.மீட்டர்களுக்கு பழுதடைந்த பேருந்துகளின் விகிதம் | 0.003 | 0.001 |
| 6. | 1,00,000 கி.மீட்டர்களுக்கு ஏற்பட்ட விபத்துகள் | 0.47 | 0.55 |
| 7. | ஒரு லிட்டர் உயர்வேக டீசல் எண்ணெய்க்கு ஓடிய கி.மீ. | 4.36 | 4.35 |
| 8. | சராசரியாக ஒரு டயர் பயனற்றதென ஒதுக்கப்படும் வரை ஓடிய கி.மீ. | 1732263 | 170118 |

## 3. மூலதனச் செலவு திட்டம் :

2015-16ம் ஆண்டில், 2014-15ஆம் நிதியாண்டிலிருந்து கொண்டுவரப்பட்ட 464 பேருந்துகளுள் 225 பேருந்துகள் மட்டுமே தடத்தில் இயக்கப்பட்டன. எஞ்சியுள்ள 239 பேருந்துகளும், 2016-17ஆம் ஆண்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

The cost of operation had gone up when compared to the previous year especially in Establishment.

a) The Establishment cost had increased by Rs.21247.57 Lakhs. The increase is due to increase in DA by 18% (6%+6%+6%) and further, due to accounting of actual pension commitment instead of 12%, which has increased the expenditure by Rs.9889.88 Lakhs.

b) The expenditure on interest had increased by Rs.768.72 lakhs due to increase in receipt of Term Loan from TDFC when compared to the previous year. Increase in loan is mainly due to financing of pension requirement in full instead of at 12%.

c) The other expenses have decreased by Rs.3792.32 Lakhs, when compared to the previous year. The decrease is mainly due to withdrawal of Rs.4927.54 lakhs HSD Oil subsidy in 2014-15 by Government vide Government Lr. No. 6742 / T1/2015-1, dated 04.06.2015, whereas no such withdrawal took place in 2015-16.

## 2. PHYSICAL PERFORMANCE

The important physical parameters are given below:

| Sl.No. | Particulars | 2015-16 | 2014-15 |
|---|---|---|---|
| 1 | No. of passengers carried (in lakhs) (including Concessional tickets) | 17814.63 | 18120.52 |
| 2 | Occupancy Ratio (%) | 76.22 | 76.12 |
| 3 | Avg. daily KMs./Bus/Day | 298 | 302 |
| 4 | No. of breakdowns | 110 | 43 |
| 5 | Breakdowns ratio per 10000 KMs. | 0.003 | 0.001 |
| 6 | Accidents/100000 KMs. | 0.47 | 0.55 |
| 7 | KMPL (HSD Oil) | 4.36 | 4.35 |
| 8 | Average Tyre life in kilometers | 173263 | 170118 |

## 3. CAPITAL EXPENDITURE PROGRAMME

During the year 2015-16, only 225 vehicles out of 464 carried over vehicles from the financial year 2014-15 were put on road. The Balance 239 vehicles were carried over to 2016-17.

4 நிதியுதவி

2014-15 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட அடிச்சட்டங்களை 2015-16 ஆம் ஆண்டில் கொள்முதல் செய்து பேருந்து கட்டுமானம் செய்வதற்காக திருவாளர்கள் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் நிதியுதவி செய்துள்ளது. அதேபோன்று 2015-16 ஆம் ஆண்டில் முதலீட்டுத் திட்டங்களை அமல்படுத்துவதற்காகவும் நடைமுறை மூலதன தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் தமிழ்நாடு அரசு குறுகிய காலக்கடன் மற்றும் வழிவகை முன்பணம் வழங்கியுள்ளது. அவ்வாறு பெறப்பட்ட மற்றும் திரும்ப கொடுக்கப்பட்ட கடன் விபரங்கள் மற்றும் இந்நிதியாண்டின் இறுதியில் இருந்த நிலுவை விபரங்கள் பின்வருமாறு:-

ரூபாய் இலட்சத்தில்

| விவரங்கள் | 01.04.15 அன்று தொடக்க இருப்பு | பெற்ற தொகை | மொத்தம் | சரிகட்டிய / திரும்ப செலுத்திய தொகை | 31.03.16 அன்று இறுதி இருப்பு |
|---|---|---|---|---|---|
| தவணைக் கொள்முதல் கடன் | 5799.44 | | 5799.44 | 1525.81 | 4273.63 |
| குறுகிய காலக்கடன் & குறித்த காலக்கடன் | 1280.32 | 2510.00 | 3790.32 | 3050.32 | 740.00 |
| தனிக்கடன் | 1679.04 | 18792.82 | 20471.86 | 5684.03 | 14787.83 |
| உடனடிக் கடன் | 1000.00 | 12000.00 | 13000.00 | 12000.00 | 1000.00 |
| அரசின் வழிவகை முன்பணம் | 32678.01 | 5723.68 | 38401.69 | 1379.75 | 37021.94 |
| அரசின் குறுகிய காலக் கடன் | 9313.58 | 2595.00 | 11908.58 | 22.87 | 11885.71 |
| மொத்தம் | 51750.39 | 41621.50 | 93371.89 | 23662.78 | 69709.11 |

## 5. குரோம்பேட்டை தொழிற்கூடம் :

குரோம்பேட்டையிலுள்ள மாநகர் போக்குவரத்து மத்திய தொழிற்கூடம், இந்த ஆண்டில் 84 புதிய பேருந்து மேற்கூடுகளைக் கட்டியது. 2015-16 ஆம் ஆண்டில் தேவை அடிப்படையில் பேருந்துகளுக்கு பெரும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## 6. பணியாளர் மற்றும் நல நிர்வாகம் :

பணியாளர் மற்றும் நிர்வாகத்திற்கு இடையிலான உறவு சுமூகமாக இருந்தது. நிறுவனம், செம்மையாகவும், சுமூகமாகவும் செயல்படுவதற்கு அனைத்து நிலைகளிலும் உள்ள பணியாளர்கள், தங்கள் முழு ஒத்துழைப்பை நல்கினர்.

அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்காக, சென்னை, தொழிலாளர் நல சிறப்பு துணை ஆணையாளர் முன்னிலையில், தொழிற்சங்கங்களுக்கும், நிருவாகத்திற்கும் இடையே 12(3) ஊதிய ஏற்பாட்டு ஒப்பந்தம்செய்து கொள்ளப்பட்டது. தொழிலாளர்களுக்கு புதிய சம்பளம் நிர்ணயிக்கப்பட்டு 01.09.2013 முதல் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையில் 80% வழங்கப்பட்டது.

## 4. FINANCIAL ASSISTANCE

M/s. Tamil Nadu Transport Development Finance Corporation Ltd., Chennai has financed for the Capital Programme towards purchase of chassis and bus body construction during the year 2015-16 for the allotment of chassis made in 2014-15. Similarly during 2015-16 the Government have sanctioned Short Term loans and Ways and Means Advance to meet the capital programme and working capital requirements. The particulars of loans received and loans repaid during the year and the balance at the close of the financial year are furnished below:

(Rs. In Lakhs)

| Loan | Opening Balance as on 1.4.2015 | Receipts | Total | Repayment / Adjustment | Closing Balance as on 31.3.2016 |
|---|---|---|---|---|---|
| H.P.Loan | 5799.44 | | 5799.44 | 1525.81 | 4273.63 |
| S.T.Loan | 1280.32 | 2510.00 | 3790.32 | 3050.32 | 740.00 |
| Term Loan | 1679.04 | 18792.82 | 20471.86 | 5684.03 | 14787.83 |
| Adhoc Loan | 1000.00 | 12000.00 | 13000.00 | 12000.00 | 1000.00 |
| Govt. of TN ST Loan | 32678.01 | 5723.68 | 38401.69 | 1379.75 | 37021.94 |
| Govt. Ways & Means Adv | 9313.58 | 2595.00 | 11908.58 | 22.87 | 11885.71 |
| Total Loan | 51750.39 | 41621.50 | 93371.89 | 23662.78 | 69709.11 |

## 5. CHROMPET WORKSHOP

The Metropolitan Transport Central Workshop at Chrompet constructed 84 new bus bodies during the year. Major bus body repairs have been carried out on need basis during 2015-16.

## 6. PERSONNEL AND WELFARE MANAGEMENT

Cordial relationship prevailed between the employees and the management all along the review period and the employees at all levels extended their full co-operation for efficient and smooth functioning of the company.

The 12(3) Wage settlement agreement entered into between the Trade Unions and Management in the presence of Special Deputy Commissioner of Labour was finalised. New pay was fixed to the employees and 80% arrears w.e.f. 01.09.2013 was paid to the employees.

## 7. பொது மக்களுக்கான சேவை :

பேருந்தில் பயணம் செய்கிற பொதுமக்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு, இக்கழகம், நடவடிக்கைகள் மேற்கொண்டது. பள்ளி செல்லும் குழந்தைகள் வசதிக்காகவும், நெரிசல் நேரப் போக்குவரத்தை சரி செய்யவும் சிறப்பு பேருந்துகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

பேருந்து நிறுத்துமிடங்கள் (Bus Bays) / பயணிகள் நிழற்குடைகள் கட்டுவதற்காக, நாடாளுமன்ற உறுப்பினர், சட்டப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சி, பல்வேறு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றிடமிருந்து இதுவரை ரூ.1746.38 இலட்சத்தை இக்கழகம் பெற்றுள்ளது. நாங்கள், சைதாப்பேட்டை, பெசன்ட் நகர், தாம்பரம், குரோம்பேட்டை, அய்யப்பன்தாங்கல், ஆதம்பாக்கம், வேளச்சேரி, எண்ணூர், ஆவடி, பெரியார் நகர், மகாகவி பாரதி நகர், கவியரசு கண்ணதாசன் நகர், திரு.வி.க. நகர், பல்லாவரம், பட்டினப்பாக்கம், மந்தைவெளி ஆகிய இடங்களில் பேருந்து முனையடங்களைக் கட்டியுள்ளோம்.

நவம்பர் 2015 மற்றும் டிசம்பர் 2015 மாதங்களில் ஏற்பட்ட எதிர்பாரா மழையினால் சென்னை நகரம் முழுவதும் வெள்ளத்தால் சூழப்பட்டு பொதுமக்களின் அனைத்து போக்குவரத்து வழிகளிலும் முழுவதுமான தடங்கல் ஏற்பட்டது. தொழிலாளர்களே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலையிலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் வகையில் சென்னை மாநகரம் முழுவதும் பொதுமக்களுக்கு 4 நாட்கள் இலவச பேருந்து வசதி அளிக்கப்பட்டது. இதனை பொதுமக்களும் ஊடகங்களும் மிகவும் பாராட்டினர்.

## 8. அரசுக் கருவூலத்திற்கு செலுத்திய தொகை :

2015-16 ஆம் ஆண்டில் இக்கழகம் மோட்டார் வாகன வரி மற்றும் அனுமதிக் கட்டணம் ஆகியவற்றிற்காக அரசு கருவூலத்திற்கு ரூ.1055.42 இலட்சம் செலுத்தியுள்ளது.

## 9. இயக்குநர்கள் குழு :

பின்வரும் மாற்றங்கள் இடம் பெற்று, இயக்குநர்கள் குழு திருத்தியமைக்கப்பட்டது.

| வ.எண். | குழுவில் சேர்ந்த இயக்குநர்கள் | வ.எண். | குழுவிலிருந்து சென்ற இயக்குநர்கள் |
|---|---|---|---|
| | திருவாளர்கள் | | திருவாளர்கள் |
| 1. | கே. கருணாநிதி | 1. | எஸ். முருகன் |
| 2. | எம். பாலகிருஷ்ணசாமி | 2. | டி. ஆல்பிரட் தினகரன் |
| 3. | பிரசாந்த் எம். வடநரே | 3. | வி. அருண் ராய் |
| 4. | எச். சுந்தர் | 4. | ஆர். தேவராஜ் |
| 5. | டி.கே. ராஜேந்திரன் | 5. | எஸ். ஜார்ஜ் |
| 6. | வி. நடராஜன் | 6. | எஸ்.வி. சுப்பையா |
| 7. | டி. பின்டோ ஸ்டீபன் | 7. | டி. பிரபாகர் ராவ் |
| 8. | ஆர். அனந்த பத்மநாபன் | 8. | கே. முனியாண்டி |
| 9 | பி. சந்தர மோகன் | 9. | கே. கருணாநிதி |
| 10. | கே. முத்துக்கருப்பன் | 10. | விக்ரம் கபூர் |

**7. SERVICE TO THE PUBLIC**

The company has taken steps to improve the safety of the travelling public. For the convenience of school children and to clear traffic at peak hour special services were increased.

Your Corporation has so far received Rs.1746.38 Lakhs from the Corporation of Chennai, various Collectorates and Civic bodies under Member of Parliament/Member of Legislative Asslembly Local Area Development Scheme from time to time for the construction of bus bays/ passenger waiting shelters. We have constructed bus terminals at Saidapet, Besant Nagar, Tambaram, Chrompet, Ayyapanthangal, Adambakkam, Velacherry, Ennore, Avadi, Periyar Nagar, M.K.B.Nagar, Kaviyarasu Kannadasan Nagar, Thiru.vi.ka. Nagar, Pallavaram, Foreshore Estate and Mandaveli.

During the unprecedented rainy season in November 2015 and December 2015 the Chennai city was lashed by flood and all means of transportation to the public was entirely disrupted. As a helping hand to disaster affected people, free service was provided to the Public throughout Chennai for 4 days, even though the employees themselves were affected by flood. This was very much appreciated by the Public and media.

**8. CONTRIBUTION TO EXCHEQUER**

The Company has contributed Rs.1055.42 Lakhs to the Exchequer during the year 2015-16 by way of Motor Vehicle Tax and Permit fees.

**9. CHANGE IN DIRECTORS**

The following changes took place and the Board of Directors was reconstituted as follows:

| Sl.No. | INCOMING | Sl.No. | OUTGOING |
|---|---|---|---|
| | Tvl. | | Tvl. |
| 1. | K.KARUNANITHI | 1. | S.MURUGAN |
| 2. | M.BALAKRISHNASAMY | 2. | D.ALFRED THINAKARAN |
| 3. | PRASHANT M.WADNERE | 3. | V.ARUN ROY |
| 4. | H.SUNDER | 4. | R.DEVRAJ |
| 5. | T.K.RAJENDRAN | 5. | S.GEORGE |
| 6. | V.NATARAAJHAN | 6. | S.V.SUBBIAH |
| 7. | T.PINTO STEPHEN | 7. | T.PRABHAKARA RAO |
| 8. | R.ANANDAPADMANABAN | 8. | K.MUNIYANDI |
| 9. | B.CHANDRA MOHAN | 9. | K.KARUNANITHI |
| 10. | K.MUTHUKARUPPAN | 10. | VIKRAM KAPUR |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | வி. கிருஷ்ணமூர்த்தி | | 11. | டீ. பின்டோ ஸ்டீபன் |
| 12. | பி.எஸ். சுரேஷ் பாலையா | | 12. | வி. நடராஜன் |
| 13. | டி. கார்த்திகேயன் | | 13. | எம். பாலகிருஷ்ணசாமி |
| 14. | சந்தரகாந்த் பி. காம்ப்ளே | | 14. | பி. சந்தரமோகன் |
| 15. | என். வெங்கடேஷ் | | 15. | பி.எஸ். சுரேஷ் பாலைய்யா |
| 16. | சி. விஜயராஜ் குமார் | | 16. | பிரசாந்த் எம். வடநரே |
| 17. | எஸ். ஜார்ஜ் | | 17. | ஏ. கார்த்திக் |
| 18. | ஜி. உதயகுமார் | | 18. | டி.கே. ராஜேந்திரன் |

---

பொறுப்பிலிருந்து சென்ற இயக்குநர்கள் ஆற்றிய மதிப்புமிக்க பணிகளுக்காக, இயக்குநர்கள் குழு தங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

## 10 பணியிடங்களில் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் ரீதியான துன்புறுத்தல் தடுப்பு :

பணியிடங்களில் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் ரீதியான துன்புறுத்தல் (தடுத்தல், தடைசெய்தல் மற்றும் தீர்த்தல்) சட்டம், 2013 ன்படி 2015-16 ஆம் ஆண்டில் உங்களது நிறுவனம் பாலியல் ரீதியிலான துன்புறுத்தல் குறித்து எந்த ஒரு முறையீட்டையும் பெறவில்லை.

## 11 கூட்டாண்மை ஆளுமை :

நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 177 (2)-ன்படி கழகம் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட தணிக்கைக் குழுவினைக் கொண்டுள்ளது.

1. தமிழ்நாடு அரசு நிதித்துறையிலிருந்து ஒரு இயக்குனர்
2. தற்சார்பு இயக்குனர்
3. மகளிர் மற்றும் தற்சார்பு இயக்குனர்
4. மேலாண்மை இயக்குனரும், நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலரும் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் இணைத்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களாவர்.

## 12. 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 186 ஆம் பிரிவின் கீழ் கடன்கள், உத்தரவாதங்கள் அல்லது முதலீடுகள் பற்றிய விவரங்கள்.

அறிக்கையாண்டில், கழகம், கடன்கள் எதுவும் வழங்கவில்லை அல்லது 2013 ஆம் நிறுவனங்கள் சட்டத்தின் 186 ஆம் பிரிவின் விதித் துறைகளின் கீழ் வருகிற முதலீடுகள் எதனையும் செய்யவில்லை அல்லது உத்தரவாதங்கள் எதனையும் எழுதிக் கொடுக்கவில்லை.

## 13 பணியாளர்கள் பற்றிய விவரங்கள்

2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் இடம் பெறக்கூடிய பணியாளர்கள் பற்றிய விவரங்கள் ஏதுமில்லை.

| | | | |
|---|---|---|---|
| 11. | V.KRISHNAMOORTHY | 11. | T.PINTO STEPHEN |
| 12. | B.S.SURESH BALIAH | 12. | V.NATARAAJHAN |
| 13. | D.KARTHIKEYAN | 13. | M.BALAKRISHNASAMY |
| 14. | CHANDRAKANT B. KAMBLE | 14. | B.CHANDRA MOHAN |
| 15. | N.VENKATESH | 15. | B.S.SURESH BALIAH |
| 16. | C.VIJAYARAJ KUMAR | 16. | PRASHANT M.WADNERE |
| 17. | S.GEORGE | 17. | A.KARTHIK |
| 18. | G. UDAYAKUMAR | 18. | T.K.RAJENDRAN |

The Board wishes to record the appreciation for the valuable services rendered by the directors left out of the Board.

**10. PREVENTION OF SEXUAL HARASSMENT OF WOMEN AT WORK PLACE**

As per Sexual Harassment of Women at work place (prevention, prohibition and redressal) Act, 2013 your Company have not received any complaints regarding sexual harassment during the year 2015-16.

**11. CORPORATE GOVERNANCE**

In pursuance to Section 177(2) of the Companies Act, 2013, the Corporation is having the Audit Committee consisting of the following Members:

1. Director from Finance Department, Government of Tamilnadu.
2. Independent Director
3. Independent Director - cum - Woman Director
4. The Managing Director and Financial Advisor & Chief Accounts Officer of Metropolitan Transport Corporation (Chennai) Limited co-opted Members.

**12. PARTICULARS OF LOANS, GUARANTEES OR INVESTMENTS UNDER SECTION 186 OF THE COMPANIES ACT, 2013**

During the year under review, the Company had not given any loans or executed any guarantees or made investments covered under the provisions of Section 186 of the Companies Act, 2013.

**13. PARTICULARS OF EMPLOYEES**

The particulars of employees required to be furnished under Section 92(g) of the Companies Act, 2013, are NIL.

## 14. இயக்குனர்கள் குழு மதிப்பாய்வு

உங்கள் கழகம் நிறுவனங்கள் சட்டம், 2013-ன்படி குறிப்பிட்டுள்ள கருத்துக்ளின் அடிப்படையில் உச்சபட்ச தரமான கூட்டாண்மை ஆளுமை நடைமுறைகளை எல்லா நடவடிக்கைகளிலும் பின்பற்ற நம்பிக்கை கொண்டும் பின்பற்றியும் வருகிறது.

## 15. இயக்குநர்களின் பொறுப்பு குறித்த அறிக்கை :

2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 134 (3) (c) யில் குறிப்பிட்டவாறு இக்கழக இயக்குநர்கள் பின்வருவனவற்றை உறுதி செய்கின்றனர் :

1. நிலையான கணக்குப் பதிவு விதிகளையும், அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளையும் பின்பற்றி, மார்ச் 31, 2016 அன்று முடிவுற்ற ஆண்டில் மாறுபாடு ஏதாவது இருப்பின் அதற்கான விளக்கங்களுடன் இக்கழகத்தின் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன;

2. மார்ச் 31, 2016 அன்று முடிவுற்ற ஆண்டின் இறுதியில் இக்கழகத்தின் கணக்குகளில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆதாய இழப்பு கணக்கும், ஐந்தொகை கணக்கின் ஆதாயம் அல்லது இழப்பு குறித்த நிதிநிலைகளும் உண்மையானதாகவும், சரியானதாகவும் அமைந்திட, தேவையான மற்றும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளும் மதிப்பீட்டுக் கோட்பாடுகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு பின்பற்றப்பட்டுள்ளன;

3. இக்கழகத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகளைக் கண்டுபிடித்துத் தடுக்கவும் 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள தேவையான கணக்குப் பதிவேடுகளை பாதுகாப்பதற்காக போதுமான கவனம் செலுத்தப்பட்டுள்ளது;

4. 31.03.2016 ஆம் நாளுடன் முடிவடைந்த நிதியாண்டுக்கு தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் ஆண்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன;

5. பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்களின் விதித் துறைகளுக்கும் இணக்கமாக இருப்பதை உறுதி செய்வதற்காக, இயக்குநர்கள், முறையான ஏற்பாட்டை வகுத்துள்ளனர். அத்தகைய ஏற்பாட்டு முறைகள் போதுமானவையாக இருப்பதுடன், செம்மையான முறையிலும் செயல்படுத்தப்பட்டன.

## 16. சமூகக் கடப்பாடு

சமூகத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டியது ஒவ்வொரு கூட்டாண்மையின் கடமையாகும். வரியவர்கள் பச்சாதாபத்திற்கும், மேம்பாட்டிற்கும்தகுதி வாய்ந்தவர்கள். ஆய்வாண்டில் உங்களது நிறுவனம் பார்வையற்றோர், மாற்றுத் திறனாளிகள், பத்திரிகையாளர்கள், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டோர், எல்லைப் போராட்டத்தில் பங்கேற்றோர், 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள், தொழில் நுட்பக் கல்லூரி, கலை அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு இலவச பயண அனுமதி வழங்குவதைத் தொடர்ந்து வருகிறது. இந் நிதியாண்டிலிருந்து, நிறுவனம் மூத்த குடி மக்களுக்கு இலவச பயண வில்லைகளை அளிக்கிறது.

**14. BOARD EVALUATION**

This Corporation always believes to the highest standards of Corporate Governance Practice in all activities and processes in accordance with the provisions of the Companies Act, 2013.

**15. DIRECTORS' RESPONSIBILITY STATEMENT**

As required in the Section 134(3) (c) of the Companies Act, 2013, your Directors confirm:

1. that in preparation of the Annual Accounts for the year ended March 31, 2016, the applicable accounting standards had been followed, with proper explanation relating to material departures, if any;

2. that for the year ended March 31, 2016 they had selected such accounting policies and applied them consistently and made judgments and estimates that are reasonable and prudent, so as to give true and fair view of the state of affairs of the Company at the end of the financial year and of the profit or loss of the Company for that period;

3. that they had taken proper and sufficient care for the maintenance of adequate accounting records, in accordance with the provisions of the Companies Act, 2013 for safeguarding the assets of the Company and for preventing and detecting fraud and other irregularities;

4. that they had prepared the Annual Report on a "going concern" basis for the year ended 31.03.2016;

5. that they had devised proper system to ensure compliance with the provisions of all applicable laws and that such systems were adequate and operating effectively.

**16. SOCIAL OBLIGATION**

It is the responsibility of every Corporate to contribute to the society. The deprived deserve empathy and upliftment. During the year under review, your Company continued to extend free travel concession to Blind persons, Differently Abled persons, Freedom Fighters, Press Reporters, persons participated in Language Stirs and allowed free travel concession to students studying upto +2 and students studying in Govt. Arts & Science Colleges and Govt. Polytechnic and extended concession fare to other students. During this financial year, the Corporation has started issuing Free Travel tokens to Senior Citizens also.

## 17. நிறுவனங்கள் சட்டம், 2013-ன் கீழ் இணக்கம்

நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 134 உடன் படிக்கப்பட்ட நிறுவனங்கள் (கணக்கு) விதிகள், 2014-ற்கு இணங்க உங்களது நிறுவனம், நிறுவனங்கள் சட்டம், 2013-ல் கூறியுள்ள உடன்பாட்டுத் தேவைகளின்படி பின்வருமாறு உடன்பட்டுள்ளது.

### (அ) இந்த ஆண்டில் நடைபெற்ற இயக்குனர்கள் குழுக்கூட்டங்கள்

அறிக்கையாண்டில், 26.06.2015, 29.09.2015, 22.12.2015 மற்றும் 31.03.2016 ஆகிய நாட்களில் முறையே இயக்குநர்கள் குழுவின் 4 கூட்டங்கள் நடைபெற்றன. 31.03.2015 ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டு பொதுக்குழுக் கூட்டம், 29.09.2015 அன்று நடைபெற்றது.

### (ஆ) ஆண்டு கணக்கு விவர அறிக்கையின் பகுதி நகல்

2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 92(3) ஆம் பிரிவின் கீழ் வகைசெய்துள்ளவாறு, ஆண்டு கணக்கு விவர அறிக்கையின் பகுதி நகல், MGT - 9 படிவத்தில், இயக்குநர்கள் அறிக்கையின் இணைப்பாக அளிக்கப்பட்டுள்ளது.

### (இ) நிதியாண்டின் இறுதிக்கும், 31.03.2016 ஆம் நாளுக்கு இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்துள்ள கழகத்தின் நிதிநிலையை பாதிக்கிற முக்கியமான மாற்றங்கள் மற்றும் பொறுப்புகள்.

நிதியாண்டின் இறுதிக்கும் (31.03.2016) அறிக்கையின் நாளுக்கும் இடைப்பட்ட காலத்தில் கழகத்தின் நிதிநிலையை பாதிக்கிற முக்கியமான மாற்றங்கள் மற்றும் பொறுப்புகள் எவையுமில்லை.

## 18. உட்தணிக்கை கட்டுப்பாட்டு முறைகள்

உங்களது கழகம் அதன் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க, சொத்துக்களைக் காக்க, மோசடி மற்றும் தவறுகளை தடுக்க மற்றும் கண்டுபிடிக்க, முழுமையான துல்லியமான கணக்கு அறிக்கைகளை உரிய நேரத்தில் தயாரிக்கவும், நம்பத்தக்க வகையிலும் நிறுவனத்தின் இயக்க நடவடிக்கைகளுக்கு ஈடான வகையிலும் நிதித் தகவல்களை தயாரிக்கவும் ஒழுங்கு முறையான மற்றும் திறன்பட்ட முறையில் அலுவல் நடத்துவதை உறுதி செய்யும் வகையிலும் போதுமான உள்ளக நிதிக் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. வெளி முகமைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் உட்தணிக்கை அறிக்கைகள் ஒவ்வொரு காலாண்டிலும் தணிக்கை குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு, வேண்டிய இடங்களில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டு வருகிறது.

## 19. தற்சார்பு இயக்குநர் / முக்கியமான நிருவாகப் பணியாளர்

திரு. எஸ். ரகுநாதன், எப்.சி.ஏ. மற்றும் திருமதி. ஆர். ஓவியா, எம்.காம்., எப்.சி.எஸ்., பி.ஜி.எல்., ஆகியோர் முறையே தற்சார்பு இயக்குநராகவும், மகளிர் மற்றும் தற்சார்பு இயக்குநராகவும் 2015-16ஆம் நிதியாண்டில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 149(6) ஆம் பிரிவின் கீழ், தற்சார்பு இயக்குநர்கள், உறுதிமொழி அறிக்கைகளை அளித்துள்ளனர்.

## 17. COMPLIANCE UNDER COMPANIES ACT, 2013

Pursuant to Section 134 of the Companies Act, 2013 read with the Companies (Accounts) Rules, 2014, your company complied with the compliance requirements and the detail of compliances under Companies Act, 2013 are enumerated below.

### a. Board Meetings held during the year

During the year under review, FOUR Board Meetings have been convened on 26.06.2015, 29.09.2015, 22.12.2015 and 31.03.2016 respectively. The Annual General Meeting for the year ended 31.03.2015 was held on 29.09.2015.

### b. Extract of Annual Return:

The extract of the annual return in MGT-9 as provided under Section 92(3) of the Companies Act, 2013, is attached as Annexure to the Directors' Report.

### c. Material changes and commitments affecting the financial position of the company which have occurred between 31.03.2016 and the date of report.

There were no material changes and commitments affecting the financial position of the company between the end of the financial year (31.03.2016) and the date of report.

## 18. INTERNAL AUDIT CONTROL SYSTEM

Your Corporation has adequate internal financial controls for ensuring the orderly and efficient conduct of its business, including adherence to the Corporation's policies; safeguarding of its assets; the prevention and detection of frauds and errors; accuracy and completeness of the accounting records and the timely preparation of reliable financial information, which is commensurate with the operations of the Corporation. The Internal Audit Reports (External Agencies) are reviewed every quarter by the Audit Committee and suitable corrective actions are taken wherever required.

## 19. INDEPENDENT DIRECTOR/KEY MANAGERIAL PERSONNEL

Thiru S.Raghunathan, FCA and Tmt. R.Ovia, FCS, BGL, have been appointed as independent director and woman director cum independent director respectively for the financial year 2015-16.

Declaration statements were obtained from the Independent Directors under section 149 (6) of the companies Act, 2013.

இந்த நிதியாண்டில், கீழ்க்காணும் பணியாளர்கள், முக்கியமான நிருவாகப்பணியாளர் அலுவலை ஆற்றியுள்ளனர்.

திரு. எம். பாலகிருஷ்ணசாமி, மேலாண்மை இயக்குநர்.

திரு. வி. வெங்கடராஜன், நிதி ஆலோசகர், மற்றும் தலைமை கணக்கு அலுவலர்.

திரு. எம். சந்திரசேகர், நிறுவனச் செயலாளர்.

## 20. எரிபொருள் சிக்கனம் மற்றும் பயிற்சி :

எரிபொருள் சேமிப்பினை மேம்படுத்துவதற்காக பின்வரும் எரிபொருள் சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஓட்டுநர்கள் மற்றும் இலக்கிடப்பட்ட வரையறைக்கும் குறைவாக ஒரு லிட்டருக்கு கி.மீட்டர் அளிக்கும் ஓட்டுநர்கள் ஆகியோருக்கு பயிற்சி மையங்களில் எரிபொருள் திறனை மேம்படுத்த, பயிற்சி அளிக்க தங்கள் கழகம் 5 ஓட்டுநர் பயிற்சி மையங்களை கொண்டுள்ளது.

ஓட்டுனர்களுக்கு தனித்தனியாகவும் குழுவாகவும் ஓட்டுனர் பயிற்சியாளர் மற்றும் மூத்த அலுவலர்கள் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. எரிபொருள் சேமிப்பை மேம்படுத்தும் பொருட்டு தவறிழைக்கும் ஓட்டுநர்களைக் கண்காணித்து அவர்களுக்கு அறிவுறுத்துவதற்காக பேருந்து எண்ணிக்கையைப் பொறுத்து அனைத்துக் கிளைகளிலும் ஓட்டுநர் பயிற்றுவிப்பாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

தகுந்த கால இடைவெளையில் உரியவாறு பேருந்துகள் புகை வெளியிடாமல் இயங்குகிறதா என ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. மாசு ஏற்படுத்துகிற காரணிகளை சிறந்த முறையில் கட்டுப்படுத்துவதற்காக இக்கழகம் புகை வெளியிடுதல் குறித்து சோதனை செய்யும் 4 மையங்களைக் கொண்டுள்ளது.

## 21. தொழில் நுட்பத்தை பின்பற்றுதல் ஆய்வு மற்றும் மேம்பாடு :

